**வெலிகேபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 மார்ச் 01 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் வெலிகேபொல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலையொன்றிற்காக ஓபநாயக பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்த்க்காரரிற்கு செலுத்த வேண்டிய ரூபா 50,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவு மற்றும் கொடுபனவு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | தவரொன்ராகும். எதிர் காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணைப்பதிவேடு பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 843,254 வித்தியாசம் ஆனது. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணைப்பதிவேடுகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். | பரிசீலனை செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 204 | 2016 ஆண்டின் பொருட்கள் மெய்மை ஆய்வின் போது இனங்காணப்பட்ட ரூபா 43,250 பெருமதியான 36 பண்டக அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பண்டங்கள் தொடர்ந்தும் பற்றாக்குறை பண்டங்களாக காணப்படுகின்றன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1988 ஆண்டு முதல் 2018 நவம்பர வரை 176 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,765,119 ஆன நானாவித முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்த்திருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | நீண்ட காலமாக நிலவிவரும் ஒன்றாகும். வழங்கப்பட்டுள்ள முற்பணத்தில் தீர்க்கக் கூடிய முற்பண தொகையொன்றை கண்டறிய முடியாதுள்ளது. முற்பணத்தை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்ட தவறுகளும் உள்ளதாக விளங்குகிறது. தற்போது அவ்வாறு நடப்பதில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 1998 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 197,288 ஆன வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,922,468 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,966,680 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,398,900 | 8,849,065 | 7,735,275 | 5,946,338 | 6,832,725 | 9,076,249 | 7,984,217 | 4,787,515 |
| (ii) | வாடகை | 2,591,990 | 1,891,521 | 1,472,020 | 183,158 | 2,340,297 | 1,790,628 | 1,860,149 | 159,072 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,160,250 | 1,469,208 | 1,454,908 | - | 1,155,300 | 1,422,234 | 1,422,234 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,536,000 | 8,275,405 | 11,880,508 | 8,043,012 | 8,939,900 | 8,348,354 | 3,019,897 | 11,541,330 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாணடு இறுதியில் ரூபா 5,827,830 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலுவையாக உள்ள 1172 அலகுகளுக்குரிய ரூபா 3,888,144 நிலவியது. | நீண்ட காலமாக நிலவும் நிலுவை வருமானத்தை சேர்க்க செயற்படுத்தப்பட வேண்டும். | நிலுவை மீதியினுள் உள்ள மிகை பில்லிடலை பதிவலிக்க மதிப்பிற்குரிய ஆளுநரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்குளை சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 74,020 ஆனதுடன், அதனுள் 05 வருடங்களை விஞ்சிய பழமையான 73 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 64,953 நிலவியது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடம் பிரிக்கப்படல் மற்றும் முதல் உரிமையாளரை தேடமுடியாமை போன்ற காரணங்களால் நிலுவை ஏக்கர் வரியை அறவிட முடியாதுள்ளது. பிம் சவிய அலுவலகத்தின் உதவியை பெற்று ஒப்பாய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | சபையினால் நடைமுறைப்படுத்தும் 05 நீர் கருத்திட்டங்கள் தொடர்பாக 2018 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தொகை ரூபா 639,943 அறவிடப்பட வேண்டி நிலவியது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை வடிக்கையாளர்களின் பட்டியல் பெறப்பட்டுள்ளதால் அறவிட அல்லது துண்டிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 மார்ச 09 ஆம் திகதிய 2009/01 இலக்க உள்ளுராட்ச்சி ஆணையாளரின் சுற்றிக்கையின் 05 பந்தி பிரகாரம் குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையாவது பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட குத்தகை வாடகையை திருத்தப்பட வேண்டிய போதும், 14 கடையறைகளின் குத்தகை வாடகை அவ்வாறு திருத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கடையறைகளும் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டும். | குத்தகை வாடகையை திருத்துவதற்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுதறுமாறு பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு விதிக்கப்பட்ட கோரிகையின் பிரகாரம் ஓபநாயக்க 08 கடையறைகளிற்காக புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை தரப்பட்டது. மீதமுள்ளவற்றின் பெறுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 64 உணவு உற்பத்தி நிறுவனங்களிற்காக பொது சுகாதார உத்தியொகத்தரின் பரிந்துரையை பெறாது வியாபார அனுமதிப்பத்திரம் விநியோககிக்கப்பட்டிருந்தது. | முறையாக குறித்த பரிந்துரையை பெற்று வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | அதிகார எல்லையில் 50 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சேவை மேற்கொள்ள போதியளவு பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும் அசௌகரியம் காரணமாக விஷேடமாக அனுப்பப்பட வேண்டிய வியாாபார விண்ணப்பங்களிற்கு மாத்திரம் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முடியுமான அளவு பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வாகன தரிப்பிட கட்டணம் அறவிடுவதற்காக துணைச் சட்டம் விதிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 300,000 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதும், எவ்வித வருமானத்தையும் ஈட்டுக்கொள்ள சபைக்கு இயலாமலிருந்தது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முயற்ச்சித்தேன். முச்சக்கர வண்டி சங்கத்தின் அங்கத்தவர்களுடன் பல கலந்துரையாடல் சுற்றுக்கள் நடாத்தப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸாருடன் ஒன்று சேர்ந்து தரிப்பிடங்பளை இனங்கண்டு முறையாக நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.6 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பண ரூபா 3,083,425 ஆனதுடன், அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நீதி மன்ற உலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அனுப்பி அட்டவணை தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. தற்போது கிடைக்கப்பெறுகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்தின் இறுதி காலாண்டினுள் வியாபார தளங்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு பதிவிடவும், அவ் வியபாரத தளங்களிற்காக பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப்போது ஒழுங்கு முறையாக செயற்படுகிறது. |
| (ii) | மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அத் திட்டம் வருமான சேகரிப்பு மற்றும் அலுவலக விடயங்களிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதிகார எல்லையில் அபிவிருத்தி மற்றும் பொது மக்களிற்கு வழங்கும் நலன்புரி வசதிகளை மேன்படுத்தல் தொடர்பான உத்தேசங்கள் எதுவும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் அனைத்து செயற்பாடுகளும் மற்றும் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட் வேண்டும். | நடைமுறை ஆண்டில் செயற்படும் திட்டம் பிரதேச மக்களின் நலன்களுக்கான சாதகமொன்றாகும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| முறையான கழிவுப் பொருள் நிகழ்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தேச கழிவுப் பொருள் முகாமை கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். | ''பிலிசரு கருத்திட்டம்'' மற்றும் தேசிய கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான குறித்த கருத்திட்ட அறிக்கை, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளதால், முறையான கழிவுப் பொருள் முகாமை கருத்திட்டமொன்றை கூடிய விரைவில் ஆரம்பிக்க முடியுமாக இருக்கும் என நம்புகிறேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ள 05 அலுவலர்களுக்குரிய கூட்டுத் தொகை ரூபா 102,423 ஆன கடன் மீதியை தீர்த்துக் கொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | நிலுவை கடன் பணத்தை அறவிட தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். | இப் பணத்தை அறவிட தொடர்புடைய நிறுவனங்களுக்கு பல முறை அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அறிவித்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னேற்ற கிராம பிரதேசங்களை உள்ளடக்கி புதிய வீத வரி மதிப்பீடொன்று 2014 ஆண்டில் செய்திருந்த போதும், புதிய பிரதேசங்களில் பெறுமதி மதிப்பீட்டிற்கு எதிராக எழுந்த மக்கள் எதிர்பின் காரணமாக புதிய பிரதேசங்களில் வீத வரி அறவிடல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. தொடர்புடைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் பொது சேவைகள் போதாதெனின் அது தொடர்பாக பரிசீலனை செய்து போதிய சேவைகளை வழங்கியேனும் வீத வரி அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய வீத வரி மதிப்பீடொன்றை அறிவிக்கும் போது பிரதேச சபை ஏற்பாடுகளிற்கமைய மேற்கொள்ள வேண்டும். | முன்னேற்ற கிராம பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு சபையினால் வழங்கப்படும் சேவைகள் போதாதென குறிப்பிட்டு பிரதேச வாசிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலனை செய்து அத்தொகையை பதிவலிக்க சபை தீர்மானத்தின் படி மதிப்பிற்குரிய விடைய அமைச்சரிற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய தற்போது, அந்த பில்லிடலை பதிவலிக்க மதிப்பிற்குரிய ஆளுநரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமை

### 3.4.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 51,684,257 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதும் அது தொடர்பான சொத்துக்கள் பதிவேடு நாலாவதுவரையாக்கப்பட்டிருக்கவில் லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாலாவதுவரையாக நடாத்தபபட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடுடொன்று பேணப்பட்ட போதும், அதில் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கணக்கிற்குரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அக் கணக்கிற்கான அட்டவணையை தயாரித்து சமர்பிக்கிறேன். |
| (ஆ) | வீதி விளக்கு பதிவேடு முறையாக மற்றும் தொடர்ந்து பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி விளக்கு பதிவேடு நாலாவதுவரையாக நடாத்தபபட வேண்டும். | வீதி விளக்கு பதிவேடு நாலாவதுவரையாக நடாத்துவதாக வினையமாக அறிவிக்கிறேன். |

### 3.4.2 விளைவற்ற/குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மல சல கழிவுகளை அகற்ற | கலி பவுசரை | முறையாக கழிவுகளை |

| | | |
|---|---|---|
| இடமொன்று இல்லாததனால் 2014 ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த கலி பவுசர் கிடைத்த திகதி முதல் விளைவற்றதாக நிலவியது. | பயனுள்ளதாக உபயோகிக்க அல்லது அதனை பிரயோசனப்படுத்தக்கூடிய உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அகற்றுவதற்கு இடமொன்று இல்லாததனால் கலி பவுசர் இவ்வாறு பயன்படுத்தாது நிருத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது உத்தேச இயற்கை பசளை உற்பத்தி கருத்திட்டத்துடன் மல சல தொகுதியொன்று நிரமாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதனால், இதனை பிரயோசனப்படுத்த முடியுமென நம்புகிறேன். |

**3.4.3 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜூலை 17 திகதி விபத்துக்குள்ளான கெப் வண்டி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கெப் வண்டியை பழுதுபார்த்திருந்த போதும், அதற்குரியதாக கிடைக்க வேண்டிய காப்புறுதி நட்டஈடு மீளாய்வாண்டு இறுதி வரையும் கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கிடைக்க வேண்டிய காப்புறுதி நட்டஈட்டை அறவிட வேண்டும். | பெறுமளவு கிடைத்துள்ளது. மீதிப் பணத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2017 செப்தம்பர் 02 திகதி கழிவகற்றிக் கொணடிருக்கும் போது விபத்திற்குள்ளான டெக்டர் வண்டி பாதுகாப்பு முறையை கடைபிடிக்காது வாகனம் பின்நோக்கி செல்லுகையில் ஏற்பட்ட விபத்தொன்றானதால் நட்டத்தை மீள்நிரப்ப முடியாது என காப்புறுதி நிறுவனம் அறிவித்திருந்தது. நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலும் சிறு தொகையே தீர்ப்பதற்கு உள்ளது. அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 05 ஆண்டுகளை விஞ்சிய காலம் முதல் ஓட்ட நிலையில் இல்லாத 02 கெப் வண்டிகள் மற்றும் 03 டெக்டர் வண்டிகளை பராதீனம் செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்ட நிலையில் இல்லாத வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 கெப் வண்டிகளிற்காக தகைமையுடைய இயந்திரவியல் பொறியியலாளரின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்று முறையான ஒழுங்கில் ஏலத்தில் விற்கவும், கைடெக்டர்களின் பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்கிறேன். |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நடைமுறைப்படுத்தும் நீர் கருதிட்டத்திற்காக 300 நீர் மாணிகள் கொள்வனவு செய்ய 2018 மே 21 திகதி பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலை மனு கோரப்பட்டிருந்த போதும், தொழிநுட்ப குழுவொன்றினூடாக முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ளாது 2018 திசெம்பர் 11 திகதி ரூபா 340,000 செலவில் 100 நீர் மாணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் நிதி நிலைமையினை கருத்திற் கொண்டு ஆரம்ப கட்டத்தில் 100 நீர் மாணிகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டது என அறியத்தருகிறேன். |
| (ஆ) | விலை மனு கோரமுன் தயாரித்திருந்த அளவுத்திட்டத்தில் நீர் சுத்திகரிப்பானுடன் சேர்த்து என குறிப்பிடப்பட்டிருக்காத போதும் கொள்வனவு செய்யப்பட்ட நீர் மாணிகளில் சுத்திகரிபான் இருந்ததனால் அந் நீர் மாணிகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கருத்திட்டத்திற்கு தேவையான நீர் மாணி எண்ணிக்கைகள் மற்றும் அவற்றில் இருக்க வேண்டிய அளவுகளை மதிப்பிட மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்காததனால் கொள்வனவு செய்யப்பட்ட நீர் மாணிகள் குறித்த கருத்திட்ட பயன்பாட்டிற்கு பொருத்தமா என்பது பிரச்சினைக்குரியதானது. | பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகைகள் முறைமையை பின்பற்றி பொருத்தமான கொள்வனவாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் தரமானது என உருதிப்படுத்திக் கொள்ள பௌதீக பரிசோதனை ஒன்றை மேற்கொண்டதாக குறிப்பிடுகிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் 20 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 5,683,200 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய வேண்டுயதுடன், அவ் ஒதுக்கீட்டை பயனுறுதி மிக்கதாக உபயோகிக்க வேண்டும். | செலவினம் ஏற்படுமென எண்ணி மதிப்பிடப்பட்ட போதும், செலவுகளை கட்டுப்படுத்தியதனால் பணம் எஞ்சியது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 22 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 13,947,232 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 54 முதல் 99 சதவீதமளவில் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய வேண்டுயதுடன், அவ் ஒதுக்கீட்டை பயனுறுதி மிக்கதாக உபயோகிக்க வேண்டும். | செலவினம் ஏற்படுமென எண்ணி மதிப்பிடப்பட்ட போதும், செலவுகளை கட்டுப்படுத்தியதனால் பணம் எஞ்சியது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த மீளாய்வாண்டில் முயற்சி எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 முதல் காலாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சுற்றறிக்கை பிரகாரம் நடாத்தப்பட்டுள்ளது. |